நகராட்சிஅலுவலகம்
பொன்னேரி

கூட்டம்எண். 07 / 2025 நாள்: 09.10.2025

# சாதாரணக்கூட்டம்

பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற சாதாரணக் கூட்டம் நகர்மன்றத் தலைவர் டாக்டர்.திருமதி.கே.பரிமளம் விஸ்வநாதன் M.B.B.S., D.G.O அவர்களின் தலைமையில் 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14.10.2025 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும் அவ்வமயம் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்கப்பட உள்ளதால் துணைத்தலைவர் மற்றும் அனைத்து உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத்தலைவர்
பொன்னேரிநகராட்சி

## நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்

**பொருள்எண் 1**

இந்நகராட்சியின் ஆணையர் அவர்களின் ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2025 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**-பதிவுசெய்யலாம்

நகர்மன்ற தீர்மான எண் 770 நாள் 14.10.2025

தீர்மானம் : ஆணையரின் ஆகஸ்டு & செப்டம்பர் 2025 - மாத நாட்குறிப்பு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்கிறது .

**பொருள்எண் 2**

இந்நகராட்சியின் பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2025 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**-பதிவுசெய்யலாம்.

நகர்மன்ற தீர்மான எண் 771 நாள் 14.10.2025

தீர்மானம் : பொறியாளரின் ஆகஸ்டு & செப்டம்பர் 2025 - மாத நாட்குறிப்பு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்கிறது

**பொருள்எண் 3**

பொன்னேரி நகராட்சி பொறியாளரின் அலுவலக பயன்பாட்டில் உள்ள BOLERO வாகனம் TN 18 BQ 2035 தொடர் பராமரிப்பு பணி செய்திட ரூ.17,208/- தொகை வழங்குமாறு M/S. Marudhar Mihsri Motors, LLP, காவாங்கரை சென்னை நிறுவனம் மூலம் பட்டியல் வரப்பெற்றுள்ளதை மன்ற பார்வைக்கும், மேற்கண்ட செலவினம் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டது மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) ஈப்பு வாகனத்தின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் முன் அனுமதிபெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க. எ.ண் 659/2021/இ1)

நகர்மன்ற தீர்மான எண் 772 நாள் 14.10.2025

தீர்மானம் : BOLERO - TN 18 BQ 2035 தொடர் பராமரிப்பு ரூ.17,208/- தொகை - நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள்எண் 4**

பொன்னேரி நகராட்சி ஆணையரின் அலுவலக பயன்பாட்டில் உள்ள BOLERO வாகனம் TN 18 BK 4856 தொடர் பராமரிப்பு பணி செய்திட ரூ.39,185/- தொகை வழங்குமாறு M/S. Marudhar Mihsri Motors, LLP, காவாங்கரை சென்னை நிறுவனம் மூலம் பட்டியல் வரப்பெற்றுள்ளதை மன்ற பார்வைக்கும், மேற்கண்ட செலவினம் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டது மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) ஈப்பு வாகனத்தின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க. எ.ண் 659/2021/இ1)

நகர்மன்ற தீர்மான எண் 773 நாள் 14.10.2025

தீர்மானம் : BOLERO - TN 18 BK 4856 தொடர் பராமரிப்பு பணி செய்திட தொகை ரூ.39,185/- - நகர் மன்ற தலைவரின் முன் அனுமதியோடு பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள்எண்** 5

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி **2025–26–**ன் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி ந.க.எண் **864/2024/இ1** நாள்.**21.08.2025**-ன் படி 04.**09.2025** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்குபட்டியல் மன்றத்தின் பார்வைக்கு

| வ. எண் | பணிகளின்பெயர் பொதுநிதி2024–25 | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி பகுதியில் சாலையில் ஏற்பட்ட பள்ளங்களை (Patches) சீர் செய்தல் பணி | 5.00 | 1. திரு.B.ஜோதிஸ்வரன் | மதிப்பீட்டைவிட **0.04** % குறைவு |
| | | | 2.M/s Sri Sai Enterprises | மதிப்பீட்டை விட 0.65%அதிகம் |
| 2 | குப்பைகள் எடுத்தல், கட்டிட இடிபாடு பொருட்களை அகற்றுதல், மண் மேடுகளை சமன் செய்தல், முட்செடிகள் மற்றும் புதர்களை அகற்ற வாடகை அடிப்படையில் ஜேசிபி இயந்திரம் சப்ளை செய்தல் பணி | 5.00 | 1. திரு.B.ஜோதிஸ்வரன் | மதிப்பீட்டைவிட **0.13** % குறைவு |
| | | | 2.M/s Sri Sai Enterprises | மதிப்பீட்டைவிட **0.64** % அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிஅளிக்கலாம்.
2. மேற்படிபணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் குறைந்த ஒப்பந்தபுள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதி அளித்திடலாம்.
   (ந.க.எண் 864 /2024/இ1)

நகர்மன்ற தீர்மான எண் 774 நாள் 14.10.2025

**தீர்மானம்** : 04.09.2025 வ.எண் 1 & 2 - குறைந்த ஒப்பந்தபுள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதி வழங்குகிது.

**பொருள்எண்** 6

இந்நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் உள்ள கணினிக்கான பிரிண்டர்கள் பழுது பட்டுள்ளதால் தட்டச்சு செய்யப்பட்டபின் பிரிண்ட் எடுக்க சிரமமாக உள்ளது. எனவே இதற்கான உதிரி பாகங்கள் வாங்க உத்தேச செலவினம் ரூ.59,000/- பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. மன்றம்அனுமதிஅளிக்கலாம்.

   ( ந. க. எண்864 /2024/இ1)

நகர்மன்ற தீர்மான எண் 775 நாள் 14.10.2025

தீர்மானம் : கணிணிக்கான உதிரி பாகங்கள் வாங்க உத்தேச செலவினம் ரூ.59,000/- பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள்எண்** 7

அரசாணை (நிலை) எண்.119 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல் (தேர்தல்) துறை நாள்.26.06.2025 மற்றும் அரசாணை (நிலை) எண்.120 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல் (தேர்தல்) துறை நாள்.26.06.2025 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.13933/2022/எம்ஏ2 நாள்.30.06.2025 மற்றும் 18.07.2025-ல் தெரிவித்துள்ளதற்கிணங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில், தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 37(1) (i-a)-ன் படி திருத்தம் செய்யப்பட்டுள்ளவாறு, பொன்னேரி நகராட்சி மன்றத்திற்கு உறுப்பினராக நியமனம் செய்ய மாற்று திறனாளி நபர்களிடமிருந்து விண்ணப்பபடிவங்கள் பெற அறிவிப்பு தினத்தந்தி தமிழ்நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு தினத்தந்தி நிறுவனத்திடமிருந்து தொகை ரூ.21,000/- வழங்கக்கோரி வரபெற்ற பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும்.

**அலுவலககுறிப்பு :**

1. மன்றம்அனுமதிவழங்கலாம்.

(ந.க.எண். 632/2025/F1)

நகர்மன்ற தீர்மான எண் 776 நாள் 14.10.2025

தீர்மானம் : மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி நாள்.30.06.2025 மற்றும் 18.07.2025-ல் தினத்தந்தியில் விளம்பரம் செய்தமைக்கு - ரூ.21,000/- தொகை பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் மன்றம் அனுமதி வழங்குகிறது.

**பொருள்எண்** 8

சாலையோர வியாபாரிகள் வாழ்வாதாரம் பாதுகாத்தல் மற்றும் சாலையோர வியாபாரம் ஒழுங்குமுறைப்படுதுதல் சட்டம் 2014 மற்றும் தமிழ்நாடு வியாபாரிகள் (வாழ்வாதாரம் பாதுகாத்தல் மற்றும் சாலையோர வியாபாரம் ஒழுங்குமுறைப்படுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015-ன்படி பொன்னேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சாலையோரம் வியாபாரம் செய்துவந்த நபர்கள் குறித்து கணக்கெடுப்பு 2022ம் வருடத்தில் நடத்தப்பட்டு 242நபர்கள் சாலையோர வியாபாரிகளாக கண்டறியப்பட்டுள்ளது. இதனையடுத்து மேற்படி சட்டம் மற்றும் விதிகளின்படி பொன்னேரி நகரவிற்பனைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. ஆனால்தற்போது 125 நபர்கள் மட்டுமே தெருவோர வியாபாரிகளாக உள்ளனர்.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க. எண். 20789/2021/UPA-2, நாள் 18.07.2025-ல் சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் மதுரை கிளையில் நடைபெற்ற வழக்கு W.A.(MD).எண்.758/2024-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்திரவில் குறிப்பிட்டிருந்த விவரங்களை மேற்கோள்காட்டி விற்பனை கட்டணம் (Vending Fee) நிர்ணயம் செய்து01.11.2025முதல் வசூலிக்க மன்ற ஒப்புதல் பெற தெரிவித்து வரப்பெற்றுள்ள மேற்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின்கடிதம் மன்றத்தில் பார்வைக்கும் மேற்படி சட்டத்தில் பிரிவு 9ல் கண்டுள்ளப்படி விற்பனை கட்டணம் (Vending Fee) விகிதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதை 01.11.2025 முதல் வசூலிக்க மன்றத்தில் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :

1. தமிழ்நாடு வியாபாரிகள் (வாழ்வாதாரம் பாதுகாத்தல் மற்றும் சாலையோர வியாபாரம் ஒழுங்கு முறைப்படுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015- ன் விதி எண். 11(3)ன் படி பொன்னேரி நகராட்சி பகுதிக்கான நகர விற்பனை குழு தோற்றுவிக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு அவர்களுக்கு கருத்துரு சமர்பிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,செங்கல்பட்டு அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க. எண். **1656/2023/அ2** நாள்.**10.06.2025**-ல் கீழ்கண்ட நபர்களைக் கொண்டு பொன்னேரி நகராட்சி பகுதிக்கான நகர விற்பனை குழு அமைத்து உத்திரவிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பதவி விபரம் | நியமனஉறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் | உறுப்பினர்கள் பெயர் மற்றும் முகவரி விவரம் |
|---|---|---|---|
| 1 | தலைவர் | நியமன உறுப்பினர் | நகராட்சி ஆணையாளர்,<br>பொன்னேரி நகராட்சி |
| 2 | உறுப்பினர்/<br>மருத்துவ அலுவலர் | நியமன உறுப்பினர் | மருத்துவ அலுவலர்<br>பொன்னேரி அரசு மருத்துவமனை . |
| 3 | உறுப்பினர் | நியமன உறுப்பினர் | நகரமைப்பு ஆய்வர், பொன்னேரி நகராட்சி |
| 4 | உறுப்பினர்<br>(காவல்துறை ) | நியமன உறுப்பினர் | 1. காவல்ஆய்வாளர்,<br>போக்குவரத்துகாவல்துறை,<br>பொன்னேரி காவல் நிலையம்.<br>2. காவல்ஆய்வாளர் (சட்டம்மற்றும்ஒழுங்கு), பொன்னேரி காவல் நிலையம். |
| 5 | உறுப்பினர்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டஉறுப்பினர்கள் | தேர்தல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் | 18.07.2024 அன்று தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் விவரம்<br>1) திருமதி மு.தனம் ( PMS 112310967303)<br>2) திருமதி ம.லட்சுமி (PMS02214531427)<br>3) திருசே.சிவராஜ் (PMS112310961813)<br>4) திருமதி பா.ராஜேஷ்வரி (PMS04215204057) |

| | | | |
|---|---|---|---|
| | | | 5) திருர.அஜீஷ்பாய் (PMS112310966653)<br>6) திருமதி கு.சங்கீதா (PMS01214502063) |
| 6 | உறுப்பினர், வணிகர்சங்கம் | நியமன உறுப்பினர் | திரு. பத்மநாபன் ,தலைவர் , வணிகர்சங்கம், பொன்னேரி. |
| 7 | உறுப்பினர் (என்.ஜி.ஓ) | நியமன உறுப்பினர் | 1) திருமதி .மேரிபிரியதர்ஷினி, ஷேர்டிரஸ்ட் ,பொன்னேரி<br>2) திருமதி. மேரிஆக்ஸிலியா , ஷேர்டிரஸ்ட் ,பொன்னேரி |
| 8 | உறுப்பினர் குடியிருப்போர்சங்கம் | நியமனஉறுப்பினர் | திரு. ஏ. ஜான் ,தலைவர் பாலாஜிநகர்குடியிருப்போர்நலசங்கம், பொன்னேரி . |

மேற்படி நகர விற்பனைக் குழுவின் கூட்டம் 15.09.2025-ம் தேதியன்று நடத்தப்பட்டு இந்நகர எல்லைக்குள் கீழ்கண்ட தெருக்கள் / பகுதிகள் உள்ளடக்கிய விற்பனை (Vending zone)மற்றும் விற்பனை அல்லாத பகுதி (Non Vending zone) ஏற்படுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தமிழ்நாடு வியாபாரிகள் (வாழ்வாதாரம் பாதுகாத்தல் மற்றும் சாலையோர வியாபாரம் ஒழுங்கு முறைப்படுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015-ன் விதிஎண்.9-ல் குறிப்பிட்டுள்ளபடி பொன்னேரி நகரத்தில் விற்பனை பகுதிகளாக ஏற்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் சாலையோர வியாபாரிகளாக கண்டறியப்பட்டுள்ள நபர்களிடமிருந்து விற்பனை கட்டணம் வசூலிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி விற்பனை கட்டணம் (Vending fees) நிர்ணயம் செய்யபதிவுத்துறை வழிகாட்டி மதிப்பு (Guide Line Value) புள்ளி விவரம் பத்திர பதிவுத்துறையின் வலைதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்டதில் விற்பனை பகுதிகளாக ஏற்படுத்தப்பட்டுள்ள தெரு / பகுதிகளுக்கான வழிகாட்டி மதிப்பு ( Guide Line Value ) அதிகபட்சம் ஒரு சதுரஅடிக்கு ரூபாய் 1200/-உள்ளது. இந்த அதிகபட்ச வழிகாட்டி மதிப்பிற்கு விற்பனை கட்டணம் கணக்கீடு செய்தால் மேற்படி வழி காட்டி மதிப்பின் 1% தொகையானது ரூபாய் 120/-மட்டுமே வருகிறது. ஆனால் தமிழ்நாடு வியாபாரிகள் (வாழ்வாதாரம் பாதுகாத்தல் மற்றும் சாலையோர வியாபாரம் ஒழுங்கு முறைப்படுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015-ன் எண்.9-ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு குறைந்தபட்ச விற்பனை கட்டணம் கீழ்கண்ட பட்டியலில் குறிப்பிட்டவாறு நிர்ணயம் செய்யப்பட வேண்டியுள்ளது.

| வ. எண். | வகைப்பாடு | பரப்பளவு | விற்பனை கட்டணம் |
|---|---|---|---|
| 1. | நிலையான வியாபாரி ( முழு நேரம் ) | 10 சதுர அடிகள் வரை | 750/- (ஒரு வருடதிற்கு) |
| | | 10 சதுர அடிகள் முதல் 25 சதுர அடிகள்வரை | 1500/- (ஒரு வருடதிற்கு) |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | 3000/- (ஒரு வருடதிற்கு) |
| 2. | நிலையான வியாபாரி ( பகுதி நேரம் அல்லது நேரம் பகிர்வு முறை ) | 10 சதுர அடிகள் வரை | 375/- (ஒரு வருடதிற்கு) |
| | | 10 சதுர அடிகள் முதல் 25 சதுர அடிகள்வரை | 750 /- (ஒரு வருடதிற்கு) |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | 1500/- |

| | | | |
|---|---|---|---|
| | | | (ஒரு வருடதிற்கு) |
| 3. | நகரும் நிலை வியாபாரி (Motor இல்லாவாகனம்) | 10 சதுர அடிகள் வரை | 750/- (ஒரு வருடதிற்கு) |
| | | 10 சதுர அடிகள் முதல் 25 சதுர அடிகள்வரை | 1500/- (ஒரு வருடதிற்கு) |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | 3000/- (ஒரு வருடதிற்கு) |
| 4. | நகரும் நிலை வியாபாரி (Motor வாகனம் ) | 10 சதுர அடிகள் வரை | 375/- (ஒரு வருடதிற்கு) |
| | | 10 சதுர அடிகள் முதல் 25 சதுர அடிகள்வரை | 750 /- (ஒரு வருடதிற்கு) |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | 1500/- (ஒரு வருடதிற்கு) |
| 5. | நகரும் நிலை வியாபாரி ( தலைச்சுமை ) | --- | 250/- (ஒரு வருடதிற்கு) |

இதன்படி பொன்னேரி நகரத்தில் விற்பனை பகுதிகளாக ஏற்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் சாலையோர வியாபாரிகளாக கண்டறியப்பட்டுள்ள நபர்களிடமிருந்து சம்மந்தப்பட்ட சாலையோர வியாபாரிகளின் பயன்பாட்டில் இருந்து வரும் இடத்தின் பரப்பளவிற்கு ஏற்ப எந்த மாதிரியான வியாபாரம் செய்கின்றனர் என்பதற்கு ஏற்ப மேற்படி அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு விற்பனை கட்டணத்தினை (Vending Fees) நிர்ணயம் செய்து வசூல் செய்ய மன்றம் அனுமதி வழுங்கலாம். மேற்கண்ட கட்டண விவரங்களை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

<u>அலுவலக குறிப்பு</u> :

1. மேற்படி Vending fees கட்டணங்களை பிரதி வருடம் ஒரே தவணையாக வசூல்செய்யலாம்.
2. (Area) மேற்குறிப்பிட்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ளவாறு விற்பனை கட்டணம் (Vending fees) நிர்ணயம் செய்து வசூலிக்க மற்றும் அனுமதி அளிக்கலாம்.
   (ந. க. எண் :1183/2022/எப் 1

நகர்மன்ற தீர்மான எண் 777 நாள் 14.10.2025

தீர்மானம் : Vending fees கட்டணங்களை பிரதி வருடம் ஒரே கட்டணமாக வசூல் செய்யலாம். பட்டியலில் குறிப்பிட்டுள்ளவாறு விற்பனை கட்டணம் நிர்ணயம் செய்து வசூலிக்க மன்றம் அனுமதி அளிக்கிறது.

<u>பொருள்எண்</u> 9

திரு.சிவசங்கரமூர்த்தி மற்றும் இருநபர்கள் ஆக்கிரமிப்பு தொடர்பாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தித்தில் நகராட்சி ஆணையாளரை இரண்டாவது எதிர் மனுதாரராக கொண்டு வழக்கு (வழக்குஎண்O.S.No 51 / 2025 ) தொடர்ந்துள்ளார். மேலும் திரு. வரதராஜன் என்பவர் குடியிருப்பு பகுதியில் செல்போன் டவர் அமைப்பதை எதிர்த்து மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தித்தில் நகராட்சி ஆணையாளரை ஐந்தாவது எதிர் மனுதாரராக கொண்டு வழக்கு (வழக்குஎண்O.S.No

82/2024) தொடர்ந்துள்ளார். மேற்படி இரு வழக்குகளுக்கும் திரு.நித்யகுமார் அரசு வழக்கறிஞர் அவர்களை நகராட்சி சார்பாக வழக்கினை நடத்துவதற்காக வழக்கறிஞர் கட்டணம் ரூ.30,000/-ஐ வழங்கக் கோரி வழக்கறிஞரிடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளதால் மேற்படி செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1004 /2024/F1)

நகர்மன்ற தீர்மான எண் 778 நாள் 14.10.2025

தீர்மானம் : இரு வழக்குகளுக்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.30,000/- செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள்எண்** 10

பொன்னேரி நகராட்சியில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக கீழ்கண்டவாறு சமுதாயக் கழிப்பிடங்கள் உள்ளன :

| வ.எண் | வார்டு எண் | தெருக்களின் பெயர் |
|---|---|---|
| 1 | 1 | தர்மலிங்கம்தெரு |
| 2 | 3 | நெல்லூர்அம்மன்கோயில்தெரு |
| 3 | 4 | சர்ச்தெரு |
| 4 | 24 | துர்காநகர் |

மேற்படி சமுதாயக்கழிப்பிடங்களின் கழிவு நீர் தொட்டிகள் (செப்டிக்டேங்க்) நிரம்பி அவ்வப் போது தனியார் கழிவு நீர் அகற்றும் வாகனம் மூலம் அகற்றப்பட்டு வருகிறது. கழிவுநீர் அகற்ற நகர்மன்ற தீர்மான எண். 383 நாள் 28.12.2023-ல் ரூ1.00 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. நகராட்சிக்கு சொந்தமாக 6000 லி. கொள்ளளவுள்ள கழிவு நீர் வாகனம் வாங்கிய பிறகு, அதற்கான ஓட்டுனர் மற்றும் உதவியாளர் ஆகியோருக்கான TEXCO நிறுவனத்தின் ஊதிய பட்டியல் தொகை மிக அதிகமாக இருந்தால், மாவட்ட ஆட்சியரால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலியின் அடிப்படையில் ஓட்டுனர் மற்றும் உதவியாளர் ஆகியோரை நியமிக்க E-Tender அறிவிப்பு வெளியிட்டு தற்போது பணியாணை வழங்கப்பட்டுள்ளது. ஓட்டுனர் மற்றும் உதவியாளர் நியமனத்திற்கான இக்கால இடைவெளியில் கழிவு நீர் அகற்ற தனியார் வாகனம் பயன்படுத்திய வகையில் பட்டியல் தொகை

செலுத்த வேண்டியுள்ளதால், இதற்கான தோராய செலவு ரூ.50,000/-(ஐம்பதாயிரம்) பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மன்றம்அனுமதிஅளிக்கலாம்

(ந.க.எண் 148/2022/எச்1)

நகர்மன்ற தீர்மான எண் 779 நாள் 14.10.2025

தீர்மானம் : கழிவு நீர் அகற்ற தனியார் வாகனம் பயன்படுத்திய வகையில் ரூ.50,000/-ல் தொகை பொது நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதி அளிக்கிறது.

**<u>பொருள்எண்</u>** 11

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கும், மின்னஞ்சல்கள் அனுப்பவும், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலிருந்து கோரப்படும் தகவல்களை உடனுக்குடன் அனுப்பவும், உயர் அலுவலர்களால் நடத்தப்படும் காணொலி ஆய்வுக் கூட்டங்களுக்கும் இணையதள வசதி அவசியமாக உள்ளது. தற்போது பயன்படுத்தப்படும் பிஎஸ்என்எல் இணையதள இணைப்பு இணையதள பராமரிப்பு காரணமாக அடிக்கடி தடைபடுவதால் இதனால் காணொலி ஆய்வுக்கூட்டம் நடைபெறும் போது தடைபடுவதுடன் மின்னஞ்சல்கள் அனுப்புவதும் பாதிக்கப்படுகிறது. எனவே அலுவலக பயன்பாட்டிற்கு வேறு இணையதள வசதி பயன்படுத்தவும் அதற்கான ஓராண்டிற்கான தோராய செலவினம் ரூ.10,000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கும்,

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம் .
   ( ந.க.எண். /2025 / அ1)

நகர்மன்ற தீர்மான எண் 780 நாள் 14.10.2025

தீர்மானம் : அலுவலக பயன்பாட்டிற்கு வேறு இணையதள வசதி பயன்படுத்தவும் அதற்கான ஓராண்டிற்கான தோராய செலவினம் ரூ.10,000/- க்கு மன்றம் அனுமதி வழங்குகிறது.

**<u>பொருள்எண்</u>** 12

பொன்னேரி நகராட்சியின் வரியில்லா இனங்களில் வார்டுஎண்12 அரி அரன் பஜார் தெரு மற்றும் வார்டுஎண் 10 தேரடி தெருவிலும் APAMT, IDSMT திட்டம் மற்றும் பொதுநிதியின் கீழ்கட்டப்பட்ட நகராட்சிக்கு சொந்தமான72 கடைகள் அமைந்துள்ளன . அதில் கீழ்காணும்

பட்டியலில் கண்டுள்ள கடைகளின் குத்தகைதாரர்கள் கடைகள் வணிகவளாகத்திற்கு பின்புறமாக உள்ளதினால் எவ்வித வணிகமும் நடைபெறாததால் வாடகைசெலுத்த இயலவில்லை என தெரிவித்துள்ளனர். இதனால்2013-2014 ஆம்ஆண்டுமுதல் 2021-2022 ம் ஆண்டு வரை வாடகை நிலுவையாக இருந்தது . எனவே நகராட்சி அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை கொண்டு நிலுவை தொகை செலுத்தாத கடைகளின் குத்தகைதாரர்களுக்கு நகராட்சி குத்தகை விதிகளின் படி நோட்டீஸ் சார்வு செய்யப்பட்டும், தொடர்ந்து வாடகை செலுத்தாததினால் நகராட்சி அதிகாரிகள் மூலம் கடைகள் பூட்டப்பட்டு (Lock and Seal) நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டது.

| S.No | Assessment No. | Shop No | Location | Period | Amount |
|---|---|---|---|---|---|
| 1 | 183/2013003 | APAMT Shop No 1 | Hariharan Bazar Street | 2013-14 to 2021-22 | 170620 |
| 2 | 183/2014004 | APAMT Shop No 2 | Hariharan Bazar Street | 2014-15 to 2021-22 | 161681 |
| 3 | 183/2013005 | APAMT Shop No 3 | Hariharan Bazar Street | 2013-14 to 2021-22 | 163532 |
| 4 | 183/2014006 | APAMT Shop No 4 | Hariharan Bazar Street | 2014-15 to 2021-22 | 165620 |
| 5 | 183/2014008 | APAMT Shop No 6 | Hariharan Bazar Street | 2014-15 to 2021-22 | 161232 |
| 6 | 183/2015007 | APAMT Shop No 7 | Hariharan Bazar Street | 2015-16 to 2021-22 | 152364 |
| 7 | 183/2013009 | APAMT Shop No 12 | Hariharan Bazar Street | 2013-14 to 2021-22 | 156240 |
| 8 | 183/29 | IDSMT Shop No 12 | Hariharan Bazar Street | 2015-16 to 2021-22 | 53712 |
| 9 | 183/30 | IDSMT Shop No 13 | Hariharan Bazar Street | 2014-15 to 2021-22 | 56972 |
| 10 | 183/31 | IDSMT Shop No 14 | Hariharan Bazar Street | 2019-20 to 2021-22 | 23332 |
| 11 | 183/63 | General Fund Shop No 19 | Theradi Street | 2017-18 to 2021-22 | 106140 |
| | **Total** | | | | **1371445** |

மேற்கூரிய கடைகள் நாளது வரை பூட்டப்பட்டு உள்ளது. இதனால் நகராட்சி வரியில்லா இனங்களில் கேட்பில் மேற்குரிய கடைகளின் வாடகை தொகை ரூ.1371445/- நிலுவையாக இருப்பதினால் வசூலில் குறைவான சதவீதம் காணப்படுகிறது. எனவே பழைய நிலுவை தொகையினை வசூல் செய்ய ஏதுவாக நீதிமன்றம் மூலம் சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளும் விதமாக அரசு நகராட்சி வழக்கறிஞர் மூலம் மேற்குரிய 11 கடைகளுக்கு நோட்டீஸ், சம்மந்தப்பட்ட குத்தகை நபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில், மேற்குரிய 11 கடைகள் தொடர்ந்து பூட்டப்பட்டு உள்ளதினால் உபயோகத்தன்மையற்று பழுதடைந்து காணப்படுகிறது. எனவே கடைகளை மறு ஏலம் விட ஏதுவாக கடைகளை சீரமைத்து நடவடிக்கை மேற்கொள்ள கோப்பினை பொறியியல் பிரிவிற்கு அனுப்ப மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. மேற்கண்ட வாடகைத் தொகை கேட்பு நிலுவைத் தொகைகளை Litigation சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளலாம். மேலும் வழக்கறிஞர் கட்டணம் தோராய செலவினம் ரூபாய் ஒரு இலட்சத்திற்கு பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

( ந.க.எண். /2025 / அ1)

நகர்மன்ற தீர்மான எண் 781 நாள் 14.10.2025

தீர்மானம் : Wd 10 & 12 - 11 கடைகள் தொடர்ந்து பூட்டபட்டு உள்ளதினால் , கடைகளை மறு ஏலம் விட கடைகளை சீரமைத்து நடவடிக்கை மேற்கொள்ள கோப்பினை பொறியியல் பிரிவிற்கு அனுப்பி மன்றத்தின் ஒப்புதலுக்கு மன்றம் ஒப்புதல் வழங்குகிறது.

வாடகை தொகை , கேட்பு நிலுவைத் தொகைகளை சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளவும் வழக்கறிஞர் கட்டணம் ரூ 1 இலட்சம் பொதுநிதியில் மேற்கொள்ள - மன்றம் அனுமதிக்கிறது.

<u>பொருள்எண்</u> 13

பொன்னேரி நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் நவீன கழிப்பிடம் பராமரிப்பு பணி M/S. SS Enterprises நிறுவனம் மூலம் குத்தகை எடுக்கப்பட்டு 01.09.2022 முதல் 30.08.2025 வரையிலான குத்தகை காலம் முடிவுற்று இருப்பதால் 01.09.2025 முதல் குத்தகை நடவடிக்கை எடுக்கப்பட உள்ள நிலையில் தற்போது வார்டு 10 பொன்னேரி நகராட்சியில் தேரடி தெருவில் அமைந்துள்ள புதிய பேருந்து நிலையத்தில் ஆறாவது நிதிக்குழு மானியம் திட்டத்தின் கீழ் பழைய கடைகள் அகற்றி புதியதாக கடைகள் கட்டப்படஉள்ளது. எனவே பேருந்து நிலையத்தில் புதியதாக

கடைகள் கட்டப்பட்டு நடை முறைப்படுத்தும் காலகட்டம் வரை நவீன கழிப்பிடம் பராமரிப்பு பணி குத்தகையினை M/S. SS Enterprises நிறுவனத்தின் ஒப்புதல் பெற்று குத்தகை தொகையில் 15% உயர்வு செய்து குத்தகையினை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்

(ந.க.எண். 706 /2025 / அ1)

நகர்மன்ற தீர்மான எண் 782 நாள் 14.10.2025

தீர்மானம் :

## <u>மேசைப்பொருள் எண் :14</u>

பொன்னேரி நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில், டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள 300 வீடுகளுக்கு ஒரு பணியாளர் வீதம் 2011 வருட கணக்கெடுப்பின்படி, இந்நகராட்சியில் 7240 வீடுகளுக்கு 24 பணியாளர்களை வெளிக்கொணர்வு ஒப்பந்த முறையில் பெற்ற நிறுவனத்தின் ஒப்பந்தகாலம் 30.09.2025 வரை முடிவடைவதாலும் புதிய ஒப்பந்தபுள்ளி கோரியதில் மாவட்ட ஆட்சியரின் விலை விகிதத்தை விட மிகவும் குறைவாக உள்ளதால் மறுஒப்பந்தபுள்ளி கோரவும் புதிய ஒப்பந்தபுள்ளிகோரி புதிய ஒப்பந்ததாரர் நியமிக்கும் வரை பொதுமக்கள் நலனும், பணியின் அவசர அவசியம் கருதி அக்டோபர் 2025 மற்றும் நவம்பர் 2025 ஆகிய இருமாதங்களுக்கு மாவட்டஆட்சியரின் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில், உள்ளூர் சுயஉதவிக்குழு மூலம் பணியமர்த்த மொத்தம் ரூ.7.50 இலட்சத்திற்கு (ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) பொதுநிதியிலிருந்து செலவு மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| விவரம் | தொகை. ரூ. |
|---|---|
| தினக்கூலி 24 பேருக்கு 61 நாட்களுக்கு | 721752 |
| **மொத்தம்** | **721752** |

<u>அலுவலககுறிப்பு</u>

1. **பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி 01.10.2025 முதல் பணி மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்**.

(**ந.க.எண்.**06/2023/**எச்**1)

நகர்மன்ற தீர்மான எண் 783 நாள் 14.10.2025

தீர்மானம் : டெங்கு கொசு ஒழிப்பு பணியில் 24 பணியாளர்களை வெளிக்கொணர்வு ஒப்பந்த முறையில் 30.09.2025 வரை ஒப்பந்தகாலம் முடிவடைவதால் மறு ஒப்பந்தபுள்ளி கோரி - புதிய ஒப்பந்ததாரர் நியமிக்கும் வரை Oct & Nov 2025 உள்ளூர் சுயஉதவிக்குழு - மூலம் பணியமர்த்த ரூ,7.50 இலட்சத்திற்கு பொதுநிதியிலிருந்து செலவு மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்பட்டு 01.10.**2025** முதல் பணி மேற்கொண்டமைக்கு -மன்றம் ஒப்புதல் வழங்குகிறது.

(ஒம்) கி. பரிமளம் விசுவநாதன்
நகர்மன்ற தலைவர்,
பொன்னேரி நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்,
பொன்னேரி நகராட்சி
திருவள்ளூர் மாவட்டம்